## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண். 46/2019</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திரு. இராஜா முகம்மது அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **27.11.2025** |
| **பெயர்** | **சரவணன்** |
| **த/பெ** | **துரைசாமி** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 01.17 பி.எம்.**
**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

5. நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் வாக்குமூலத்தை நான் படித்துப்பார்த்து தான் கையொப்பம் போட்டேன். என் பிரமாண வாக்குமூலத்தில் 6ம் பத்தியில் 1ம் வாதி 2ம் வாதி என்று கூறியுள்ளது தவறு என்றும் அது பிரதிவாதி என்று தான் குறிப்பிடப்பட்டு இருக்க வேண்டும் என்றால் சரிதான். அப்படியென்றால் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி மூலமான தாவா 1 ம் இன சொத்தின் அடிமனையில் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தி கொண்டது குறித்து 2019ல் தான் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான்.

6. மேற்சொன்ன செட்டில்மெண்ட் பத்திரம் 1ம் அட்டவணை சொத்தை தான் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்தார் என்றால் சரியல்ல 2ம் ஐட்ட சொத்து தான் செட்டில்மெண்ட் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கையில் எனது வழக்குரையிலோ அல்லது எனது வாக்குமூலத்திலோ 1ம் இன சொத்து என குறிப்பிட்டு இருப்பது தவறு என்றால் தவறு தான். என்படி 2ம் பிரதிவாதியான என் தாயார் 1ம் பிரதிவாதியான என் சகோதரருக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்த சொத்தில் தான் அவர் அனுபவித்து கொண்டு வருகிறார் என்றால் சரிதான், ஆனால் அந்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது.

7. இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள 1ம் மற்றும் 2ம் இன சொத்துக்கள் ஒரே பரப்பளவை கொண்டவை என்றால் 1ம் இன சொத்து குறைவாகவும் அதை விட 2ம் இன சொத்து கூடுதலாகவும் உள்ளது. அவ்வாறு இருக்கையில் நான் முந்தைய குறுக்கு விசாரணையில் எ அட்டவணை சொத்தின் விஸ்தீர்னம் 42 க்கு 60 அடி என்றும் பி அட்டவணை சொத்தின் விஸ்தீர்னம் 42 க்கு 60 அடி என்று சாட்சியம் அளித்தது தவறு என்றால் சரிதான். அப்படி இருக்கையில் எ அட்டவணை சொத்தின் விஸ்தீர்னம் என்ன என்றால் 40 க்கு 40 வீடு ஆகவும் 20 க்கு 40 காலி மனையாக உள்ளது. மொத்த விஸ்தீர்னம் என்ன என்றால் 60 அடிக்கு 43 அடி ஆகும், மீதமுள்ள 3 அடி வழியாகும்.

8. பி அட்டவணை சொத்தின் மொத்த விஸ்தீர்னம் என்ன என்றால் 70 அடிக்கு குறையாமல் வரும். எ அட்டவணை சொத்தில் நானும் 3 பிரதிவாதியும் தான் குடியிருக்கிறோம் என்றால் சரிதான், எங்களுடன் சேர்த்து என் சகோதரியும் குடியிருக்கிறார். என் பிரமாண வாக்குமூலத்தில் நானும் மற்ற வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் சம்மதத்தின் பெயரில் 2ம் அட்டவணை சொத்தில் ஒரு கோவிலை கட்டி அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். அந்த கோவில் எந்த வருடம் கட்டப்பட்டது என்றால் 03.07.2011. அந்த கோவிலின் பரப்பளவு எவ்வளவு என்றால் 40 அடிக்கு 23 ½ அடி.

9. பி அட்டவணை சொத்தில் நான் மேலே குறிப்பிட்ட கோவிலின் வடக்கு திசையில் தான் 1ம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வீடு கட்டுவதற்கு முன்பே கோவில் கட்டப்பட்டதா என்றால் சரியல்ல, அதன் பிறகு தான் கட்டப்பட்டது. வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே ஏற்பட்ட ஒருமித்த உடன்பாட்டில் தான் கோவிலை கட்டினேன் என்றால் சரிதான்.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 01.36. பி.எம்**